# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 11 | கர்நாடக சங்கீதம் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

## பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. 'தகிட' எனும் சொற்கட்டு அமைந்த நடை.
    1. திஸ்ரநடை  2. சதுஸ்ரநடை  3. கண்டநடை  4. மிஸ்ரநடை

02. பஞ்சபுராணம் பாடப்படும்ஒழுங்கில் "திருப்பல்லாண்டு எத்தனையாவதாக அமைந்துள்ளது.
    1. 2வது  2. 3வது  3. 4வது  4. 5வது

03. "உற்றுமை சேர்வது" என்ற தேவாரம் பாடப்படும் பண்.
    1. தக்கராகம்  2. பழம்பஞ்சுரம்  3. செவ்வழி  4. செந்துருத்தி

04. விரல்களால் "மீட்டுதல் எனும் தொழிற்பாட்டுடன் ஓசையினை உண்டாக்கும் இசைக்கருவி.
    1. வீணை  2. புல்லாங்குழல்  3. மிருதங்கம்  4. வயலின்

05. "இனி நமக்கொரு வேலையுமில்லை" எனும் கீர்த்தனை அமைந்துள்ள தாளம்.
    1. ஆதி  2. ரூபகம்  3. ஜம்பை  4. ஏகம்

06. பதங்களில் இயற்றியவரின் முத்திரை காணப்படுவது
    1. பல்லவியில். முதல் சரணத்திலாகும்
    2. அனுபல்லவியில் முதல் சரணத்திலாகும்
    3. அனுபல்லவியில் முதல் சரத்திலாகும்
    4. பல்லவியில், கடைசிச்சரணத்திலாகும்

07. 72 மேளகர்த்தா இராகங்களில் 4வது, 10வது சக்கரங்களில் இடம் பெறும் ரிஷப காந்தார ஸ்வரப் பெயர்கள் குறிக்கும் சங்கேதாட்சரஙகள் முறையே.
    1. ர, கி  2. ரி, கி  3. ரி, கு  4. ரு, கு

08. சுத்த ரிஷாதத்துக்கு ஒப்பான ஸ்வரஸ்தானம்
    1. சாதாரண காந்தாரம்  2. சதுஸ்ருதி ரிஷபம்
    3. சதுஸ்ருதி தைவதம்  4. கைசிகி நிஷாதம்

09. பின்வருவோருள் வயலின் வாத்திய அமைப்பினை முதலில் உருவாக்கியவர் யார்?
    1. பாலுஸவாமிதீட்சிதர்  2. ஸ்ட்ராடிவேரியல்
    3. பீதோவன்  4. சுப்பராம தீட்சிதர்

10. உரைக்கிடையே பாட்டும் நகைச்சுவையும் சேர்ந்து இடம் பெறும் இசை நிகழ்வு
    1. தாளலயம்  2. இசைநாடகம்  3. பல்லியம்  4. வில்லுப்பாட்டு

11. புல்லாங்குழலின் முகரந்திரத்துளைக்கு மிக அருகில் உள்ள துவாரம்.
    1. ஸ்வராந்திரம்  2. முத்திரைத்துளை
    3. நாதரந்திரம்  4. தாராதந்திரம்

12. ஹ்ரஸ்வ ஸ்வரங்களின் அட்சரகால எண்ணிக்கை.

1. 01 2. 02 3. 03 4. 04

13. பண்டைத் தமிழிசையில் சந்தமேளம் எனப்படுவது.

1. மாயாமாளவகௌளை 2. தோடி 3. ஹரிகாம்போதி 4. கல்யாணி

14. சஞ்சாரம் எனப்படுவது.

1. ஜதிக்கோர்வை 2. சங்கதி 3. ஸ்வரக்கோர்வை 4. நியாசம்

15. பின்வரும் சப்ததாள அலங்காரங்களுள் குறில் - நெடில் ஸ்வரங்களைக் கொண்டுள்ள அலங்காரம்.

1. துருவதாள அலங்காரம் 2. அடதாள அலங்காரம்
3. மட்டியதாள அலங்காரம் 4. ஏகதாள அலங்காரம்

16. ஆதிகாலத்தில் தமிழிசைக்கு பக்க வாத்தியங்களாகப் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள்.

1. வயலின், மிருதங்கம் 2. யாழ், குழல்
3. யாழ், நாதஸ்வரம் 4. வீணை, மிருதங்கம்

17. பின்வருவோருள் அபூர்வ தாளங்களிலும் பல்வேறு நடைகளிலும் பாடல்களை இயற்றியவர்.

1. அருணகிரிநாதர் 2. தியாகராஜர் 3. நாவுக்கரசர் 4. சேந்தனர்

18. பிறழ்ச்சிப்பண என அழைக்கப்படும் இராகம்.

1. ஷாடவராகம் 2. பாஷாங்கராகம் 3. உபாங்கராகம் 4. ஜன்னியராகம்

19. தோஷமுள்ள ராகம் எனப்படுவது.

1. ரட்டராகம் 2. தக்கராகம் 3. விவாதிராகம் 4. பழந்தக்கராகம்

20. தியாகராஜசுவாமிகளால் இறுதியாகப் பாடப்பட்ட திருதி.

1. தெரதீயகராதா 2. சியாமசுந்தராங்க 3. பாலகனகமய 4. நம்மிவச்சின

21. பதம் என்ற உருப்படியை பாடும் போது வெளிப்படும் ரஸம்.

1. கருணை 2. வீரம் 3. சிருங்காரம் 4. சாந்தம்

22. பின்வருவனவற்றுள் சபாகான உருப்படிகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி.

1. கீதம், வர்ணம் 2. வர்ணம், ஜதீஸ்வரம்
3. இலட்சணகீதம், பதம் 4. கீர்த்தனை, தில்லானா

23. பக்தி இலக்கியங்களினூடாக பத்தி இசையில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலப்பகுதி.

1. 5ஆம், 6ஆம் நூற்றாண்டு 2. 7ஆம், 8ஆம் நூற்றாண்டு
3. 14ஆம், 15ஆம் நூற்றாண்டு 4. 17ஆம், 18ஆம் நூற்றாண்டு

24. நாட்டுப்பாடல் வகைகளைத் தழுவி பாடப்பட்ட பதிகம்.

1. திருவெம்பாவை 2. திருவம்மானை 3. திருநேரிசை 4. திருவாசகம்

25. எல்லா அங்கங்களுக்கும் சாகித்தியம் அமைந்த உருப்படி.

1. பதவர்ணம் 2. தாளவர்ணம்
3. அடதாளவர்ணம் 4. நவராகமாலிகாவர்ணம்

26. ஆரோகணத்திலோ அவரோகணத்திலோ அல்லது இரண்டிலுமோ ஸ்வரங்கள் விலக்கப்பட்டு வருதல்.

1. வர்ஜராகம் 2. வக்ரராகம் 3. பாஷாங்கராகம் 4. உபாங்கராகம்

27. வாத்திய த்ரயத்தில் இரண்டாவதாக இடம் பெறும் வாத்தியம்.

1. வயலின் 2. புல்லாங்குழல் 3. நாதஸ்வரம் 4. வீணை

28. சேக்கிழார் சுவாமிகளால் அருளப்பட்ட பெரியபுராணம் பாடப்படும் இராகத்திற்கு இசையான பண்.

1. காந்தாரம் 2. நட்டராகம் 3. தக்கேசி 4. செந்துருத்தி

29. "இனி நமக்கொரு கவலையுமில்லை" என்னும் கீர்த்தனை அமைந்துள்ள இராகத்தின் தாய்ராகம்.

1. கரகரப்பிரியா
2. மாயாமாளவகௌளை
3. ஹரிகாம்போதி
4. சங்கராபரணம்

30. ஐந்து அங்கங்களைக் கொண்ட உருப்படி.

1. கீர்த்தனை 2. இராகமாளிகை 3. வர்ணம் 4. ஸ்வரஜதி

31. தேவாரப் பதிகங்களை பண் முறையில் பாடிப்பரவச் செய்தவர்கள்.

1. ஆழ்வார் 2. ஓதுவார்கள் 3. வாக்கேயக்காரர் 4. வைணீநகர்கள்

32. "சிவகாம சுந்தரி" என்ற முகாரி இராகக் கிருதியின் எடுப்பு.

1. அநீத எடுப்பு
2. சமஎடுப்பு
3. அனாகத எடுப்பு
4. ஆகத எடுப்பு

33. சமண சமயத்தை தழுவிய மகேந்திரவர்மனையும் நின்ற சீர்நெடுமாறனையும் மீண்டும் சைவர்களாக்கிய பெருமைக்குரியர்கள் முறையே.

1. திருஞானசம்பந்தர், சுந்தரர்
2. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர்
3. திருநாவுக்கரசர், சுந்தரர்
4. சுந்தரர், மாணிக்கவாசகர்

34. "பண்ணும்பதமேழும்"என்னும் தேவாரத்தின் பண், தாளம் என்பன முறையே.

1. நட்டபாடை, திஸ்ரஏகம்
2. கொல்லி, ரூபகம்
3. நட்டராகம், ஆதி
4. நட்டபாடை, ரூபகம்

35. "மோஸஹோதனலோ"என்ற அடானா இராகப் பதத்தைப் பாடியவாக்கேயகாரர்.

1. சியாமா சாஸ்திரிகள்
2. முத்துஸ்வாமி தீட்சிதர்
3. புரந்தரதாசர்
4. தியாகராஜ சுவாமிகள்

36. "சங்கிரக சூடாமணி"என்னும் நூலை இயற்றியவர்.

1. வேங்கடமகி
2. கோவிந்தாச்சாரியார்
3. மதங்கர்
4. நாரதர்

**கீழே தரப்பட்ட அலங்காரத்திய் ஓர் ஆவர்த்தனத்தை அடிப்படையாகக் கொண்டு 37 – 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

**ஸாகாரீ | கரி | ஸாகாரீக | ஸாரீகமா ||**

37. மேற்குறிப்பிட்ட அலங்காரம் அமைந்துள்ள தாளம்.

1. மிஸ்ரஜாதி அடதாளம் 2. மிஸ்ரஜாதி தருவதாளம்
3. கண்டஜாதி மட்டியதாளம் 4. சங்கீர்ணஜாதி துருவதாளம்

38. தரப்பட்டுள்ள ஆவர்த்தணத்திற்கு அடுத்ததாக வரும் ஆவர்த்தணம்.

1. ரீபாமாக | ரிக | ரீமாகாரி | ரீகாமபா ||
2. ரீமாகாரி | கம | ரீமாகம | ரீகாமபா ||
3. ரீகாரீஸ | கரி | ரீமாகாம | ரீகாமபா ||
4. ரீமாகாரி | மக | ரீமாகாம | ரீகாமபா ||

39. மேலே தரப்பட்டுள்ள ஆவர்த்தனத்தில் வரும் நெடில் ஸ்வரங்களின் எண்ணிக்கை.

1. 6 2. 8 3. 9 4. 10

40. இசைக் கச்சேரிகளின் இறுதியில் தோஷ நிவாரணியாகப் பாடப்படும் ராகம்.

1. மத்தியமாவதி 2. சங்கராபரணம் 3. தோடி 4. மோகனம்

(1 x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

* முதலாம் வினாவுக்கும், ஏனைய வினாக்களுள் நான்கு வினாக்களை தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(01) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக?

1. விவாதி மேளங்களின் எண்ணிக்கை எத்தனை?
2. முத்துத்தாண்டவர் இயற்றிய பதங்கள் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றன?
3. வீணையின் தாள தந்திகளுள் முதலாவது தந்தியின் பெயர் யாது?
4. கர்நாடக சங்கீதம் - ஹந்துஸ்தாயி சங்கீதம் எனும் இரு பிரிவுகளை முதன் முதலில் குறிப்பிடும் நூல் எது?
5. தோடி ராகத்தின் நேர்ப்பிரதிமத்திம ராகம் யாது?
6. தாளத்தின் முதன் மூன்று அங்கங்களும் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
7. சாமகானம் பாடப்படும் ராகம்?
8. உத்க்ருஹம், த்ருவம், மேளபாகம், ஆபோகம் எனும் அங்கங்களைக் கொண்ட உருப்படி?
9. நவரோஜ் ராகத்திற்கு இணையான இரண்டு பண்களைத் தருக?
10. திஸ்ரஜாதி, துருவதாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கையை ஒத்த வேறு இரு தாளங்களைத் தருக.

(12 புள்ளிகள்)

(02) பின்வரும் இராகங்களுள் ஏதெனும் ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. (உருப்படிகள், சஞ்சாரம் உட்பட)

1. தோடி  2. ஹரஹரப்பிரியா  3. ஹரிகாம்போதி

(12 புள்ளிகள்)

(03) பின்வருவனவற்றுள் விரும்பிய இரண்டினைப் பற்றி விரிவான விளக்கத்தைத் தருக.

1. எடுப்புக்கள்  2. பதம்  3. புதவர்ணம்

(12 புள்ளிகள்)

(04) கோபாலகிருஸ்ணபாரதியாரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைப்பணியையும் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

1. வாழ்க்கைக்காலம்
2. பிறந்த இடம்
3. பெற்றோர்
4. இளமைக்கல்வி
5. வாழ்க்கைச் சம்பவங்கள்
6. இசைப்பணி
7. இயற்றிய உடுப்படிகள்
8. சீடர்கள்

(12 புள்ளிகள்)

(05)
1. புல்லாங்குழலின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
2. இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.
3. இவ்வாத்தியத்தினை வாசிக்கும் முறையினை தருக?
4. இது வாத்தியத்தினை சுருதிசேர்க்கும் முறையை விளக்குக.
5. இதனை வாசித்து பிரபல்யமடைந்த வித்துவான்கள் இருவரைக் குறிப்பிடுக.

(12 புள்ளிகள்)

(06)
1. 72 மேளகர்த்தா சக்கரத்தில் உத்தர மேளகர்த்தாக்களைக் கொண்ட சக்கரங்களின் பெயர்கள், மேள எண்கள், இராகங்களின் பெயர்கள் அவற்றின் ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றை அட்டவணைப்படுத்துக.

அல்லது

2. சப்த தாளங்களும் லகுவின் ஜாதி பேதங்களினால் 35 தாளங்களாக உருவாகும் முறையினை விளக்கி அட்டவணைப்படுத்துக.

(12 புள்ளிகள்)

(07) இந்தியாவில் 7ம், 8ம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்க.

(12 புள்ளிகள்)